முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.11.2024) முகாம் அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு உள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (9.11.2024) முகாம் அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### ஒன்றியச் செயலாளர் அ.ம.துரைவீரமணி தலைமையில்

## அயப்பாக்கம் - வானகரம் - அடையாளம்பட்டு ஊராட்சிகளின் பாக முகவர்கள் கூட்டம்!

### மதுரவாயல் தொகுதி பார்வையாளர் பி.டி.பாண்டிச்செல்வம் சிறப்புரை!

சென்னை, நவ. 10 - சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அயப்பாக்கம், வானகரம், அடையாளம்பட்டு ஆகிய ஊராட்சிகள் அடங்கிய பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர், தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியம், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் ஆலோசனைப்படி, இன்று (10.11.2024 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 5 மணியளவில் அயப்பாக்கம், வீட்டு வசதி வாரியத்தில் உள்ள செல்வி மஹாலில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அ.ம.துரை வீரமணி தலைமை வகிக்கிறார்.

மதுரவாயல் தொகுதி பார்வையாளர் பி.டி.பாண்டிச்செல்வம் அனைத்து (BLA-2) பாக முகவர்களுடன் கலந்துரையாடி ஆலோசனை நடத்த இருக்கிறார்.

எனவே அனைத்து பாக முகவர்கள் (BLA-2), ஒன்றியக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அ.ம.துரை வீரமணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பட்டப்படிப்புகள் – ஆராய்ச்சிப் படிப்புகள் – மாணவர்கள் சேர்க்கை விபரங்கள் வழங்கிடல்!

## மாணவ - மாணவியர் பயன்பெறும் வகையில் 'உதவி மையம்' அமைக்கப்படும்!

### உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அறிவிப்பு!

**சென்னை, நவ.10- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் மாணவ, மாணவியர், பெற்றோர், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பட்டப் படிப்புகள், ஆராய்ச்சிப் படிப்புகள், மாணவர்கள் சேர்க்கை முதலான விவரங்கள் அனைத்தையும் வழங்கும் உதவி மையம் (Help Desk) அமைக்கப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அறிவித்துள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் உயர்கல்வித் துறையின்கீழ் 13 பல்கலைக்கழகங்கள், 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 கல்வியியல் கல்லூரிகள், 10 பொறியியல் கல்லூரிகள். 52 தொழில்நுட்பக் கல்லூரிகள்/சிறப்பு நிறுவனங்கள், 162 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகியவை செயல்பட்டுவருகின்றன.

இக்கல்வி நிறுவனங்களில் மாணவ, மாணவியருக்கு வெளிப்படையான, பதிலளிக்கக்கூடிய மற்றும் அணுகுவதற்கு எளிமையான ஒரு சூழலை ஏற்படுத்தும் விதமாக, அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் மாணவர் சேர்க்கைக் காகவும் மற்றும் இதர காரணங்களுக்காகவும் மேற்குறிப்பிட்டுள்ள கல்வி நிறுவனங்களுக்கு வருகை தரும் மாணவியர். பெற்றோர் மற்றும் பொது மக்கள் அந்நிறுவனங்களில் வழங்கப்படும் ஆகியோருக்கு பட்டப்படிப்புகள், பட்ட மேற்படிப்புகள், ஆராய்ச்சிப்படிப்புகள், மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள். துறை அலுவலகங்களின் அமைவிடம், தனியர்களின் கோரிக்கை தொடர்பாக எந்த அலுவலரை அணுகுவது. அலுவலக நடைமுறைகள், தனியர்களின் கோரிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் போன்ற விவரங்களை ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள ஏதுவாக மேற்குறிப்பிட்டுள்ள உயர்கல்வித் துறையின்கீழ் இயங்கும் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் அக்கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து விவரங்களையும் நன்கு அறிந்த, அனுபவம் வாய்ந்த பணியாளர்களைக் கொண்ட ஓர் உதவி மையம்" (Help Desk) கல்லூரியின் முதன்மையான இடத்தில் ஏற்படுத்தப்படும். இந்த மையம் பயனாளிகளுக்கு எளிதில் உதவும் வகையில் (user friendly) அமைக்கப்படும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் - முனைவர் கோவி. செழியன் அறிவித்துள்ளார்.

### மகாராஷ்டிரா சட்டப்பேரவைக்கு வரும் 20ந்தேதி தேர்தல்!

## வாக்குகளின் சதவீதத்தை அதிகரிக்க தேர்தல் ஆணையம் நடவடிக்கை !

### உணவு விடுதி உரிமையாளர்களிடம் ஆலோசனை!

மும்பை, நவ.10- மகாராஷ்டிரா சட்டப்பேரவைக்கு வரும் 20ந்தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் வாக்காளர்களை அதிக அளவில் பங்குபெற வர்த்தகர்கள், மல்டிபிளெக்ஸ் உரிமையாளர்கள், உணவு விடுதி உரிமையாளர்களிடம் தேர்தல் ஆணையம் ஆலோசனை மேற்கொண்டது. மும்பை போலீசார், மாநகராட்சி அதிகாரிகள், நடிகர் வர்ஷா உஸ்காவோன்கர், ரோகித் ஷெட்டி கிரிக்கெட் வீரர் அஜிங்கியா ரகானே உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். இதில், சில சலுகைகளை அளிக்க உரிமையாளர்கள் முன் வந்துள்ளனர்.

மும்பை நகரில் உள்ள பி.வி.ஆர். ஐநாக்ஸ், சினிபோலிஸ் உள்ளிட்ட திரையரங்குகள் வாக்காளர்களுக்கு 20 சதவீத சலுகையை அளிக்க முன் வந்துள்ளன. வாக்களித்ததற்கான மை அடையாளம் கொண்ட விரலை காட்டி, வரும் 20, 21 ஆகிய நாட்களில் 10 முதல் 20 சதவீத சலுகையைப் பெற்று கொள்ளலாம் என அறிவித்துள்ளனர். சில்லரை வர்த்தகத்தின் கீழ் வரும் 20ந்தேதி ஒரு நாள், 10 முதல் 15 சதவீத சலுகையைப் பெற்று கொள்ளலாம் என வர்த்தக கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம் திறப்பு விழா

முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு விழா

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

நாள்: 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 9.45 மணி, இடம்: பட்டம்புதூர், விருதுநகர்

ரூ.101 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைத்தல்

ரூ.417 கோடியில் 57,556 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம், விருதுநகர்

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

நா. முருகானந்தம்,இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600 009

செ.ம.தொ.இ./1130/வரைகலை/2024